# இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

# பதவி வெற்றிடம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பின்வரும் பதவிகள் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB) ஆனது,. சோதனை/ அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள், பரிசோதனை அமைப்புகள், சான்றுப்படுத்தல் அமைப்புகள் மற்றும் ஒத்தியல்பு மதிப்பீடுகளில் ஈடுபட்டுள்ள சரிபார்ப்பு சான்றுப்படுத்தல் அமைப்புகளின் தராதர அங்கீகாரத்திற்குப் பொறுப்பானதாகும். இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, தற்போது வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுகிறது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, தராதர அங்கீகார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக சர்வதேச ஆய்வுகூடத் தராதர அங்கீகார கூட்டுறவுப் பரஸ்பர அங்கீகார ஏற்பாடு (ILAC MRA), சர்வதேச தராதர அங்கீகார மன்ற பலதரப்பு ஏற்பாடு (IAF MLA) ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ளது

## <u>சாரதி – 01 பதவி</u>

**<u>தகைமைகள்:</u>**

**<u>வெளிவாரி விண்ணப்பதாரிகள்:</u>**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தி, குறைந்தபட்சம் இரண்டு அமர்வுகளில் இரண்டு (02) விசேட (C) சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

<u>மற்றும்</u>

கனரக வாகனங்களை ஓட்டுவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டியதுடன், சாரதி உரிமத்தைப் பெற்ற பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் சாரதிய அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**<u>உள்ளக விண்ணப்பதாரிகள்</u>**

கனரக வாகனங்களை ஓட்டுவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டியதுடன், சாரதி உரிமத்தைப் பெற்ற பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் சாரதிய அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்

<u>மற்றும்</u>

ஆரம்ப தேர்ச்சியற்ற (PL1) வகையிலுள்ள ஒரு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பளக் குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்: PL3 - 2025 –ரூ. 43,280 –10x490 -10 x 540– 12 x 630 = 67,040**

<u>வயது:</u>

விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

<u>பதவியை உறுதிப்படுத்தல்:</u>

இந்த வகையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர், கடமைகளை ஏற்றுக்கொண்ட தினத்திலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு தகுதிகூர் காலமொன்றில் வைக்கப்படுவார். தகுதிகூர் காலத்தின் போதான அவரது செயலாற்றுகை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமாக இருந்தால், மற்றும் 1 ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தி பெற்றதன் மேல், தகுதிகூர் காலத்தின் முடிவில் அவர் அப்பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இலுள்ள பதவியொன்றில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரு வருட செயல் முனைப்பான காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**<u>ஆட்சேர்ப்பு நடைமுறை</u>**

வர்த்தகப் பரீட்சை ஒன்று மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் ஊடாக.

**<u>ஏனையவை</u>**

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும். ஏனைய நன்மைகளில் *EPF 15%* மற்றும் *ETF 3%* பங்களிப்பு அடங்கும். மேலும் நீங்கள் மருத்துவ காப்புறுதித் திட்டம் ஒன்றிற்கு உரித்துடையவராவீர்கள்.

***<u>ஒவ்வொரு விண்ணப்பதாரியும்,</u>***

i. *இலங்கைப் பிரசையபக இருத்தல் வேண்டும்.*
ii. *பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியானவராக இருத்தல் வேண்டும்.*
iii. *சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்..*

விண்ணப்பங்கள், உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடனும், சுயவிபரத் தாளுடனும், பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு, 2026 ஜனவரி 28 ஆம் திகதி ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவி, கடித உறையின் மேல் இடது மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். அரச அல்லது அரச சார்புத் துறையில் உள்ள பணியாளர்கள், அந்தந்த நிறுவனத் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்..

**தலைவர்**
**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை**
**இல. 44, பிரத்தியேக பொருளாதார மத்திய நிலையம், கிரிமண்டல மாவத்த,**
**நாரஹென்பிட்ட.**